D E P O S I T I O N  O F  W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.88/2024

**P.W**. 1(LW1)

| | |
|---|---|
| Name | : திரு.சுரேஷ்குமார் |
| Father/Husband Name | : திரு. சுப்பிரமணி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது லட்டூர் கிராமத்தில் குடியிருந்து மரக்கடையில் ஆச்சாரியாக வேலை செய்து வருகிறேன். சாட்சி சுப்பிரமணி எனது அப்பா ஆவார். சாட்சி இளங்காளி எனது அம்மா ஆவார். சாட்சி வஜ்ஜிரவேலு என்னுடைய அண்ணன் ஆவார்.

2) கடந்த 06.04.2023ம் தேதி மாலை 6.30 மணியளவில் நான் வேலைக்கு சென்றிருந்த போது நேதாஜி மற்றும் சூரியா ஆகியோர் எனது அண்ணனை தாக்கியதாக எனக்கு சொன்னார்கள். மறுநாள் காலை 6.30 மணியளவில் அவரை பார்க்க செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு கிளம்பியபோது ஆஜர் எதிரி சாமிதுரை என்னை பார்த்து அசிங்கமாக பேசினார். நான் ஏன் அசிங்கமாக பேசுகிறீர்கள் என்று கேட்டபோது ஆஜர் எதிரி குமுதா என்னை பார்த்து அசிங்கமாக திட்டி கையால் என்னை

அடித்தார். ஆஜர் எதிரி சாமிதுரை அருகில் இருந்த செங்கல்லை எடுத்து என்னை அடித்தார். எனக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டது. என்னை பார்த்து கொன்றுவிடுவதாக மிரட்டினார். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்று உள்நேயாளியாக சிகிச்சையில் இருந்த போது 12.30 மணியளவில் சட்ராஸ் காவல் நிலைய போலிசார் வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் மர ஆச்சாரியாக வேலை செய்து வருகிறேன். நான் வழக்கமாக வேலைக்கு காலை 9 மணி அளவில் சென்று இரவு 7 மணி அளவில் வீட்டிற்கு திரும்பி வருவேன். எனக்கும் ஆஜர் எதிரிகளின் குடும்பத்திற்கும் சம்பவத்திற்கு முன்பே இடம் சம்மந்தமாக பிரச்னை இருந்தது என்றால் சரிதான். போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் பகல் 12 மணியளவில் விசாரணை செய்தார்கள். எதிரிகளின் வீடு என் வீட்டிலிருந்து பின் பக்கமாக 5 வது வீடு. நான் சம்பவம் நடந்த போது எங்கு இருந்தேன் என்றால் என் வீட்டில் தூங்கி எழுந்துவிட்டு என் அண்ணனை பார்ப்பதற்காக கிளம்பினேன். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு எப்படி சென்றேன் என்றால் இரு சக்கர வாகனத்தில் என் அக்கா மகன் என்னை அழைத்துக் கொண்டு சென்றார். அந்த இரு சக்கர வாகனத்தின் பதிவு எண் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சம்பவம் நடந்து ஒரு மணி நேரத்தில் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு

சென்றுவிட்டேன். எனக்கும் எதிரிகளின் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்த காரணத்தால் எனக்கு சுயமாக ஏற்பட்ட காயத்தை எதிரி கல்லால் அடித்ததால் காயம் ஏற்பட்டது என்று பொய்யாக புகார் கொடுத்து தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற நபரை சாட்சியாக போலிசார் சேர்க்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரிகள் மீது பொய்யாக புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.88/2024

**P.W**. 2(LW2)

| | |
|---|---|
| Name | : **திரு.சுப்பிரமணி** |
| Father/Husband Name | : திரு. முனுசாமி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது லட்டுர் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி சுரேஷ்குமார் எனது மகன் ஆவார். சாட்சி இளங்காளி எனது மனைவி ஆவார். சாட்சி வஜ்ஜிரவேலு என்னுடைய மகன் ஆவார்.**

2) கடந்த 2024 ம் வருடம் ஒரு நாள் மாலை 6.30 மணியளவில் என் மகன் வஜ்ஜிரவேலுவை நேத்தாஜி மற்றும் சூரியா ஆகியோர் தாக்கினார்கள். மறுநாள் காலையில் எனது மகன் சுரேஷ்குமார் என் மகன் வஜ்ஜிரவேலுவை பார்ப்பதற்காக மருத்துவமனைக்கு கிளம்பியபோது ஆஜர் எதிரிகள் சாமிதுரை, குமுதா ஆகியோர் அசிங்கமாக பேசினார்கள். ஆஜர் எதிரி சாமிதுரை செங்கல்லால் எனது மகன் சுரேஷ்குமாரை தாக்கினார். அதில் என் மகன் சுரேஷ்குமாருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. அவரை கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள். என் மகனை மருத்துவமனையில்

சேர்த்தார்கள். நான் மருத்துவமனையில் இருந்த போது போலிசார் அங்கு வந்து என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எங்கள் குடும்பத்திற்கும், ஆஜர் எதிரிகளின் குடும்பத்திற்கும் முன் பகை இருந்தது என்றால் சரிதான். அடிக்கடி சண்டை போட்டுக் கொள்வோம் என்றால் சரிதான். எனது பெரிய மகன் வஜ்ஜிரவேலுவிற்கு மது அருந்தும் பழக்கம் கொண்டவர் என்றால் சரியல்ல. சம்பவம் குறித்து கேள்விப்பட்டு தான் நான் ஓடி சென்று பார்த்தேன் என்றால் எனது மகன் சுரேஷ்குமார் சத்தம் போட்டார். நான் சென்று பார்த்தேன். நான் நடந்த சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். இந்த சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது முன்பகை இருப்பதால் அவர்களுக்கு எதிராக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.88/2024

**P.W**. 3(LW3)

| | |
|---|---|
| Name | : திருமதி.இளங்காளி |
| Father/Husband Name | : திரு. சுப்பிரமணி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது லட்டுர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். சாட்சி சுரேஷ்குமார் எனது மகன் ஆவார். சாட்சி சுப்பிரமணி எனது கணவர் ஆவார். சாட்சி வஜ்ஜிரவேலு என்னுடைய மூத்த மகன் ஆவார்.

2) எங்கள் குடும்பத்திற்கும், ஆஜர் எதிரிகளின் குடும்பத்திற்கும் முன் பகை இருந்தது. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை என் மகன் வஜ்ஜிரவேலுவை நேத்தாஜி மற்றும் சூரியா ஆகியோர் தாக்கினார்கள். மறுநாள் காலையில் எனது மகன் சுரேஷ்குமார் என் மகன் வஜ்ஜிரவேலுவை பார்ப்பதற்காக மருத்துவமனைக்கு கிளம்பியபோது ஆஜர் எதிரிகள் சாமிதுரை, குமுதா ஆகியோர் அசிங்கமாக பேசினார்கள். ஆஜர் எதிரி சாமிதுரை செங்கல்லால் எனது மகன் சுரேஷ்குமாரை தாக்கினார். அதில் என் மகன் சுரேஷ்குமாருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. அவரை

கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள். என் மகனை மருத்துவமனையில் சேர்த்தார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

சம்பவம் நடந்தபோது நான் வீட்டில் தான் இருந்தேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு சம்பவம் நடந்த தேதி ஞாபகம் இல்லை. சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் எதிரிகளுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் இருந்த முன்பகை காரணமாக நான் அவர்களுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.